**தமிழச்சி தங்கபாண்டியன்**

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# திறன் சார்ந்த சான்றிதழ் பயிற்சி வழங்க தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் உடன்பாடு ? திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஒன்றிய அரசுக்கு கேள்வி

புதுடெல்லி, மார்ச் 22

பிரதமர் கௌசல் விகாஸ் யோஜனா (பிஎம்கேவிஒய்) திட்டத்தின் கீழ் சான்றிதழ் பயிற்சிகள் பெறுவதற்கு வழிவகுக்கும் வகையில் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களான மைக்ரோசாப்ட், சிஸ்கோ, அடோபி மற்றும் இதர பல தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஒன்றிய அரசு உடன்பாடு (எம்.ஓ.யு.) ஏதும் செய்து கொண்டுள்ளதா என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

**இதுகுறித்து கடந்த 20 ஆம் தேதி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் கதிர் ஆனந்த் ஆகியோர் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:**

பி.எம்.கே.வி.ஒய். திட்டம் மற்றும் இந்திய திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த ஐந்தாண்டுகளில் மிகப்பெரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஒன்றிய அரசு செய்து கொண்டுள்ள உடன்பாட்டின் விவரம் மற்றும் அந்த நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற நிதியுதவி உள்ளிட்ட விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

தேசிய திறன் மேம்பாட்டு நிறுவனம் (என்.எஸ்.டி.சி.) மற்றும் தேசிய திறன் மேம்பாட்டு ஏஜென்சி (என்.எஸ்.டி.ஏ.) ஆகியவை கடந்த 25 ஆம் ஆண்டு முதல் திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் திட்டங்களுக்கு ரூ 12,000 கோடி செலவிடப்பட்டதாக கூறப்படும் தகவல் உண்மையா அவ்வாறு உண்மை எனில் அதைப் பற்றி விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

**மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் கதிர் ஆனந்த் ஆகியோர் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் அளித்த பதில் விவரம் வருமாறு:**

இந்தியத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை அமைச்சகத்தின்(எம்.எஸ்.டி.இ.) கட்டுப்பாட்டில் இயங்கும் திறன் பயிற்சி தலைமை இயக்ககம் (டிஜிடி) மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களான ஐபிஎம், சிஸ்கோ, குவஸ்ட் அலையன்ஸ், மைக்ரோசாப்ட், அடோபி இந்தியா ஆகியவற்றுடன் உடன்பாடு செய்து கொண்டுள்ளது.

தொழில்துறையினருக்குத் தேவையான புதிய தொழில்நுட்பத்தில் பயிற்சி பெற்ற ஊழியர்களை அளிக்க ஏதுவான வகையில் திறன் மேம்பாட்டு புதிய பயிற்சி வகுப்புகளை ஒன்றிய அரசின் தேசிய திறன் மேம்பாடு நிறுவனம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

எனினும் பி.எம்.கே.வி.ஒய். திட்டத்தின் கீழ் மிகப்பெரிய தகவல்கள் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஒன்றிய அரசு எந்த உடன்பாடும் செய்து கொள்ளவில்லை.

ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ், பிக் டேட்டா அனாலிசிஸ், பிளாக் செயின், கிளவுட் கம்ப்யூட்டிங், சைபர் செக்யூரிட்டி, இன்டர்நெட், வெப், மொபைல் மேம்பாடு மற்றும் விற்பனை, 3டி பிரிண்ட்டிங் மற்றும் மாடலிங் உள்ளிட்ட நவீன கால தொழில்நுட்பப் பயிற்சி வகுப்பகள் தொடர்பாக மேற்கண்ட நிறுவனங்களுடன் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது.

தொழில் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (சி.எஸ்.ஆர்.) திட்டத்தின் கீழ் இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக திறன் பயிற்சி தலைமை இயக்ககத்திடமிருந்து(டிஜிடி) பிரத்யேக நிதியுதவி ஏதும் பெறப்படவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளில் இத்திட்டத்தின் மூலம் 16.99 லட்சம் இளைஞர்கள் பயிற்சி பெற்று பலனடைந்துள்ளனர்.

ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை அமைச்சகம், அதன் கீழ் இயங்கும் திறன் பயிற்சி தலைமை இயக்ககம் மற்றும் ஐபிஎம் நிறுவனம் ஆகியவை இணைந்து தகவல் தொழில்நுட்பத் துறையில் நவீன பட்டயப் படிப்பு பயிற்சி, நெட்வொர்க்கிங், கிளவ்ட் கம்ப்யூட்டிங் உள்ளிட்ட பல்வேறு திறன் சார்ந்த தொழில்களில் பயிற்சி அளித்து வருகின்றன. நாடு முழுவதும் உள்ள 15 தேசிய திறன் மேம்பாட்டு நிறுவனங்களில் (என்.எஸ்.டி.ஐ.எஸ்.) 2018 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 15 மாணவர்கள் பயிற்சி பெற்றனர். கடந்து 2022 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 340 ஆக உயர்ந்தது.

பி.எம்.கே.வி.ஒய். திட்டத்தின் முக்கிய அம்சங்கள் தேசிய திறன் மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் கடந்த 2022 டிசம்பர் இறுதி வரை இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தேசிய திறன் மேம்பாட்டு நிறுவனம் (என்.எஸ்.டி.சி)
ரூ.8023.95 கோடி செலவிட்டுள்ளது.

கடந்த 2015-16 ஆம் ஆண்டு முதல் முதல் 15-3-2023 வரை தேசிய திறன் மேம்பாட்டு ஏஜென்சிக்கு விடுவிக்கப்பட்ட மானியத்தொகை ரூ.138.65 கோடி ஆகும். கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் இந்த ஏஜென்சி தேசிய வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி நிறுவனம் (என்.சி.வி.இ.டி.) என்ற பெயரில் இயங்கி வருகிறது. மேற்குறிப்பிட்ட மானியத் தொகையில் இந்த நிறுவனம் இயங்குவதற்கு ரூ. 134.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*****